வாக்குமூலம்

**திருவையாறு நீதித்துறை நடுவர் நீதிமன்றம்**

வழக்கு எண். C.C. 131/2010

வழக்கு சாட்சி- **அ.சா.4**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | தேவதாஸ் | : | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | அண்ணாமலை | : | தொழில் | காவல் ஆய்வாளர், (ஓய்வு) |
| கிராமம் | மன்னார்குடி | : | சமயம் | |
| தாலுக்கா | மன்னார்குடி | : | வயது | 67/2024 |

(3ம் எதிரி இறந்துவிட்டார். 1 மற்றும் 2ம் எதிரிகள் ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**நாள் : 04.10.2024**

**முதல் விசாரணை :**

நான் தஞ்சாவூர் மாவட்டம், திருச்சிற்றம்பலம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து 31.05.2014ம் தேதி பணி ஓய்வு பெற்றேன். கடந்த 25.08.2008ம் தேதியன்று நான் திருவையாறு காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது, திருவையாறு நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் இருந்து வரப்பெற்ற புகார்தாரர் கோபாலகிருஷ்ணன், திருச்சி என்பவர் குவிமுச பிரிவு 156(3) ன் கீழ் அளித்த புகாரை பெற்று நிலைய குற்ற எண். 213/2008 சட்டப் பிரிவுகள் 197, 198, 466, 468, 120(B) இதசவின் கீழ் வழக்கு பதிவு செய்து மேல்விசாரணைக்காக ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார். **(அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.14/அ.சா.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

**1 மற்றும் 2 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

**1)** இவ்வழக்கு சம்மந்தமாக அ.சா.1 எழுத்து மூலமான புகாரினை நீதிமன்றத்தில் இருந்து புகார் வருவதற்கு முன்பாக காவல் நிலையத்தில் கொடுத்தாரா என்றால் அவ்வாறு புகார் எதுவும் கொடுக்கவில்லை. இந்த வழக்கின் சம்பவமானது எந்த தேதியில் நடைபெற்றதாக புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் அவ்வாறு குறிப்பிடப்படவில்லை. இவ்வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள தாவா இடமானது அ.சா.1க்கு சொந்தமானது என்பது பற்றி ஆவணங்கள் ஏதும் என்னிடம் தாக்கல் செய்தார்களா என்றால், நீதிமன்றத்தில் இருந்து வரப்பெற்ற புகாரில் இணைக்கப்பட்டு இருந்தது.

2) புகாரில் இணைக்கப்பட்ட ஆவணத்தில் 05.07.2008ம் தேதி சந்திரகாசம் மூப்பனார் மகன் பழனிச்சாமி என்பவர் கொடிக்கால் சாகுபடி செய்தார் என்பதை திருவையாறில் வசிக்கும் பொதுமக்கள் மற்றும் விவசாய தொழிலாளர்கள் கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில் 07.07.2008 அன்று எதிரி 2 1417ம் பசலிக்கு சாகுபடி அனுபவ சான்று வழங்கப்பட்டதாக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். நீதிமன்றத்தில் இருந்து வரப்பெற்ற புகாரை அப்படியே நான் முதல் தகவல் அறிக்கையாக பதிவு செய்தேன் என்றால் சரிதான்.

3) ஆவணங்கள் எதுவும் அ.சா.1னிடம் இருந்து விசாரணை செய்து பெறவில்லை என்றால் சரிதான். புகாரை பெற்று பதிவு செய்தவுடன் நான்

யாரையும் அழைத்து விசாரணை செய்து வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். முறையாக யார் சாகுபடி செய்தார்களோ அவர்களுக்கு கிராம நிர்வாக அலுவலர்களால் விசாரணை செய்து சான்று வழங்கப்பட்டது, ஆனால் அந்த சான்றுகள்தான் மோசடியாக வழங்கப்பட்டது என்று உண்மையை மறைத்து புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றும், அதனை சரிவர விசாரணை செய்யாமல் நான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.